செ.வெ.எண்: 18 நாள்: 10.02.2018

# மத்திய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையில் அனைத்து சுகாதார குறியீடுகளின் அடிப்படையில் முதல் மூன்றாவது இடத்தை தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை பெற்றுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் சமுதாயக் கூடத்தில் திண்டுக்கல் ராஜராஜேஸ்வரி மருத்துவமனையின் சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (10.02.2018) துவக்கி வைத்தார்.

இம்மருத்துவ முகாமினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு மூட்டுவலி, முதுகுவலி, கழுத்துவலி, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, முதுகு தண்டுவட அறுவை சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சைகள் தொடர்பாக பரிசோதனை மற்றும் சிகிச்சைகளை பார்வையிட்டார். அறுவை சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்படும். எனவே இம்மருத்துவ முகாமை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:

இந்த வாரம் உலக புற்றுநோய் வாரமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் தொற்றாநோய்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 4.93 கோடி நபர்களுக்கு இரத்த அழுத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேபோன்று 4 கோடி நபர்களுக்கு சர்க்கரை நோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மருத்துவ பரிசோதனைகளில் நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை தமிழக அரசு செய்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 3 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் சுகாதாரம் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினால் அனைத்து சுகாதார குறியீடுகளின் அடிப்படையில் நேற்று மத்திய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையில் முதல் மூன்றாவது இடத்தை தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை பெற்றுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை முதலிடத்தை பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வரும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கும் மற்றும் தமிழக அரசுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்கள் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இம்மருத்துவ முகாமில் திண்டுக்கல் ராஜராஜேஸ்வரி மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மரு.விக்னேஷ்ராஜ், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜெயபாரதி, மாவட்ட திட்ட அலுவலர் (மு.வி.ம.கா.தி) திரு.சுவாமிநாதன், கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.பி.சாம்பசிவம், முன்னாள் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**